**தமிழ்நாடு, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**"அனைவரும் கற்போம்''** **" அனைவரும் உயர்வோம்''**


**அனுப்புநர்**

**திரு. இரா. சுடலைக்கண்ணன்., இ.ஆ.ப.,**
மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
கல்லூரிச் சாலை,
சென்னை– 600 006.

**பெறுநர்**

**மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளா் மற்றும்**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலா்,**
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
அனைத்து மாவட்டங்கள்.


**ந.க.எண். 3003 / B6 / கட்டடம் /ஓபகதி / 2019 நாள் 14.08.2019.**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் – " தூய்மை நிகழ்வுகள் – 2019" (Swachhta Pakhwada - 2019) – பள்ளிகளில் சுகாதாரம் சார்ந்த விழிப்புணா்வு நிகழ்ச்சிகள் நடத்துதல் – சார்பு.

பார்வை : 1. மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம், புது டெல்லி, இணைச் செயலாளா் நேமு கடிதம் எண் F 27 –6 / 2019 – IS-9 நாள் 24.07.2019.

2. சென்னை – 05, பள்ளிக்கல்வித் துறை, அரசு முதன்மைச் செயலாளா் அவா்களிடமிருந்து வரப்பெற்ற மின்னஞ்சல் நாள் 24.07.2019.

*******

பார்வை 1ல் காணும் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் படி "தூய்மையான நிகழ்வுகள் " திட்டத்தின் அடிப்படையில் அனைத்துப் பள்ளிகளிலும் சுகாதாரம் சார்ந்த விழிப்புணா்வு குறித்த நிகழ்வுகள் செப்டம்பா் 1 முதல் 15 வரை நடத்திட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்நிகழ்வுகளின் புகைப்படங்கள், ஒளிக்காட்சிகள் மற்றும் வீடியோ படங்கள் ஒவ்வொரு நாளும் பதிவேற்றம் மனித வள மேம்பாட்டுத் துறை வலைதளத்தில் செய்யப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி மற்றும் அலுவலகங்களில்,

1. பழைய கோப்புகளை உரிய வழிமுறையில் அழித்தல் /தீா்வு செய்தல்.
2. வீணாகும் அனைத்து விதமான கழிவுப் பொருட்களான, உடைந்த நாற்காலிகள், பயன்பாட்டில் இல்லாத உபகரணங்கள், பாழ்பட்ட வாகனங்கள் .., முதலியன பள்ளி வளாகத்திலிருந்து உரிய வழிமுறைகளில் அப்புறப்படுத்துதல்.
3. ஆசிரியா்கள் மற்றும் மாணவா்கள் உள்ளூா் பிரதிநிதிகளோடு இணைந்து தூய்மை நிகழ்வுகள் (Swachhta Pakhwada) சார்ந்து விவரங்களைப் பள்ளிக்கு அருகாமையில் உள்ள பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல் ஆகிய நிகழ்வுகள் நடத்திடவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, அனைத்துப் பள்ளிகளிலும் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு அதன் விவரங்களை மேற்குறிப்பிட்டவாறு மனித வள மேம்பாட்டுத் துறை வலை தளத்தில் ஒவ்வொரு நாளும் அன்று மாலை 4.00 மணிக்குள் பதிவேற்றம் செய்திடும் வகையில் ஒவ்வொரு நாளின் தொகுப்பினையும் samagrashikshatn2019 @ gmail.com என்ற மாநிலத் திட்ட இயக்கக மின்னஞ்சலுக்கு உடனடியாக அனுப்பிட நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலா்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :** நிகழ்ச்சி நிரல்

**ஒம்/*********
**மாநிலத் திட்ட இயக்குநர்**

**நகல்:**

1. இயக்குநா், பள்ளிக் கல்வி இயக்ககம் தகவலுக்காகவும் மேல் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
2. இயக்குநா், தொடக்கக் கல்வி இயக்ககம் தகவலுக்காகவும் மேல் நடவடிக்கைகாகவும் அனுப்பலாகிறது.

**மனித வள மேம்பாட்டுத் துறை**
**"தூய்மை நிகழ்வுகள்" (Swachhata Pakhwada) – நிகழ்ச்சி நிரல்**
**(செப்டம்பர் 1 முதல் 15 வரை–2019)**

| | | |
|---|---|---|
| 01.09.2019 to 02.09.2019 | ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கள்கிழமை | Swachhata Shapath Day |

- காலை பள்ளி பிரார்த்தனையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தூய்மை உறுதி மொழியை எடுத்துக் கொள்ளுதல்.
- பள்ளி வகுப்பறையில், ஒவ்வொரு குழந்தையும் தன்சுத்தம் / பள்ளி சுத்தம் / சமூக சுத்தம் / வீட்டுச் சுத்தம் சார்ந்து ஒரு செயல்பாட்டில் கவனம் செலுத்தி நடைமுறை படுத்துதல்.
- மாண்புமிகு மாநிலப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், பள்ளி ஆய்வாளர்கள் பள்ளி மாணவர்களுக்கு தூய்மை சார்ந்த விழிப்புணர்வுக் குறிப்புகளை வழங்குதல்.
- துறை / நிறுவனங்கள் / பள்ளிகளின் வலைதளங்களில் தூய்மை சார்ந்த விழிப்புணர்வு வாசகங்களை வெளியிடுதல்.
- தூய்மை சார்ந்த விழிப்புணர்வு வாசகங்களை உருவாக்கி அதனை மின்னணு விளம்பரப் பலகைகள் வாயிலாக உள்ளதை துறை / மாநில web portal –ல் வெளியிடுதல்.
- **மாவட்டம் வாரியாக உறுதி மொழி ஏற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (காலை 12.00 மணிக்குள்ளாக)**

| | | |
|---|---|---|
| 03.09.2019 | செவ்வாய்க்கிழமை | Swachhata Awareness Day |

- பள்ளி மேலாண்மைக் குழு அல்லது பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம் நடத்தி, ஆசிரியர் மற்றும் பெற்றோர்கள் சுத்தம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் சார்ந்து விவாதிக்கப்பட வேண்டும். மேலும், மாணவர்கள் தங்கள் பள்ளி மற்றும் வீட்டில் இப்பழக்க வழக்கங்களை மேற்கொள்ளும் வகையில் ஊக்குவித்தல்.
- பள்ளியில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் ஆசிரியர்கள் ஆய்வு செய்து அதனைச் சுத்தம் செய்திடத் தேவையான முன்மொழிவுகளையும், திட்டங்களையும் தயார் செய்தல்.
- கழிவறைகள், சமையலறை, வகுப்பறைகள், மின் விசிறி, கதவுகள், ஜன்னல்கள் புதர்கள் ஆகியவற்றைச் சுத்தம் செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். பள்ளி வளாகம் மற்றும் சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்திட உரிய நடவடிக்கை எடுத்தல்.
- சுற்றுப் புறத்தினை சுத்தமாக வைத்திடும் வகையில் நெகிழியால் (Plastic) மாசு, திறந்த வெளியில் மலம் கழித்தல், காடுகளை அழித்தல், நீரை வீணாக்குதல், தூசு மற்றும் புகை இல்லா தூய காற்று மற்றும் சுற்றுச்சூழலுக்கு எதிரான பழக்க முறைகள் முதலியவன சார்ந்து விழிப்புணர்வினை உண்டாக்கும் வகையில் முகாம் நடத்தப்பட வேண்டும்.
- **மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகயின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)**

| | | |
|---|---|---|
| 04.09.2019 – 05.09.2019 | புதன்கிழமை – வியாழக்கிழமை | Community Out reach |

- ஆசிரியர்கள் தூய்மை நிகழ்வுகள் (Swachhata Pakhwada) அதிலும் நீடித்த கழிவறைப் பயன்பாடு, வீணாகும் குப்பை பொருட்களை பயன்படுத்துதல், பொதுமக்கள் நீர் வளங்களை வீணாக்குதலை தவிர்த்து நீர்பாதுகாப்பு (Jal Shakti Abhiyan) குறித்த விழிப்புணர்வு பள்ளிக்கு அருகாமையில் உள்ள கிராம பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல்.
- ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர் தினம் சரியான முறையில் கொண்டாடப்பட வேண்டும்.
- பள்ளிகளில் சுகாதாரம் சார்ந்து பொதுமக்களின் பங்களிப்பை / கவனத்தினை அதிகரிக்கும் விதமாக பள்ளிக்கு அருகாமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள் மற்றம் மாணவர்கள் நடத்துதல்.
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளூர் பிரதிநிதிகளோடு இணைந்து தூய்மை நிகழ்வுகள் (Swachhta Pakhwada) சார்ந்து விவரங்களைப் பள்ளிக்கு அருகாமையில் உள்ள பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல்.
- பள்ளி மாணவர்கள் அணிவகுப்பு மேற்கொள்ள முழக்கங்கள் (Slogans) தயாரித்தல்.

- மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)

| | | |
|---|---|---|
| 06.09.2019 | வெள்ளிக்கிழமை | Green School Drive |

- பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றம் (Eco Club) சார்ந்து விழிப்புணர்வு மற்றும் முக்கியத்துவத்தை உண்டாக்குதல்.
- ஒவ்வொரு பள்ளியிலும் நீலம் மற்றும் பச்சை நிறத்தில் பெரிய அளவில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்படவேண்டும். மறு சுழற்சி செய்யக்கூடியது / மறு சுழற்சி செய்யமுடியாதது என்று மாணவர்கள் எளிதில் வகுத்து அறியும் வண்ணம் வைத்தல்.
- பள்ளி வளாகம் மற்றும் பள்ளியின் உட்புறம் மரக்கன்றுகளை நட்டு மாணவர்கள் தோட்டம் அமைப்பதில் ஊக்குவித்தல்.
- கழிவுப் பொருட்களை மறுசுழற்சி செய்து மீளப்பயன்படுத்துதல்.
- பசுமை இல்லம் (Green house) உருவாக்க முயற்சி மேற்கொள்ளுதல், பழைய கோப்புகளை உரிய வழிமுறையில் தீர்வு செய்தல்/ அழித்தல்.
- வீணாகும் அனைத்து விதமான கழிவுப் பொருட்களான, உடைந்த நாற்காலிகள், பயன்பாட்டில் இல்லாத உபகரணங்கள், பாழ்பட்ட வாகனங்கள் .., முதலிய பொருட்களை பள்ளி வளாகத்திலிருந்து அப்புறப்படுத்துதல்
- மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்த பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)

| | | |
|---|---|---|
| 07.09.2019 | சனிக்கிழமை | Swachhata Participation Day |

- பள்ளி மாணவர்களுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரப் பழக்கங்கள் சார்ந்த விழிப்புணர்வு குறித்த கட்டுரைப் போட்டி மற்றும் வினாடி–வினாப் போட்டி நடத்துதல்.
- ஓவியப் போட்டி நடத்துதல்.
- காந்திஜி மற்றும் சுத்தம் தலைப்பில் விவாத மேடை நடத்துதல்.
- சுத்தம் மற்றும் சுகாதாரம் சார்ந்த நாடகம் (நடிப்பு), கவிதைப் போட்டி நடத்துதல்.
- மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பரம் வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)
- மாவட்டம் வாரியாக ஓவியப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் பங்கேற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கையினையும் 10 ஓவியப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி தாள்களின் தெளிவான புகைப்படம் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)

| | | |
|---|---|---|
| 08.09.2019 - 09.09.2019 | ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கள்கிழமை | Hand Wash Day |

- அன்றாட வாழ்க்கையில் முறையான கை கழுவும் முறையின் அவசியத்தைக் கற்பித்தல்.
- உணவுக்கு முன்னரும் உணவு உட்கொண்ட பின்னரும் குழந்தைகள் முறையாக கைகழுவுவதைக் கற்பித்தல்.
- குடிநீர் வசதி மற்றும் கழிவறைக் கட்டமைப்புகளில் மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு ஏற்ற வகையில் தடையில்லாது பயன்படுத்திட வசதிகள் செய்யப்பட்டுள்ளதைக் கண்காணித்து உறுதி செய்தல்.
- தண்ணீர் வீணாவதைக் கண்டறிதல் / தடுத்தல்.
- கைகழுவும் இடத்தில் வெளியாகும் தண்ணீரை தோட்டத்திற்குப் பயன்படுத்த வழிவகை செய்தல்.
- மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)

| | | |
|---|---|---|
| 10.09.2019 | செவ்வாய்கிழமை | Personal Hygiene Day |

- மாணவர்கள்/பணியாளர்கள் மற்றும் மற்றவர்களை ஊக்குவிக்கும் விதமாக தூய்மையைப் பேணும் விதத்தினை ஒளி–ஒலி நிகழ்ச்சியினை தயாரித்தல்/ வெளியிடுதல்.
- மாணவர்கள் தங்கள் கை, கால் நகங்களை வெட்டி முறையாக /சுத்தமாக இருந்திட கற்பித்தல்.
- சுகாதாரமான பழக்கவழக்கங்களின் வாயிலாக உடல் நலம் பேணுதலை கற்றல்.
- சுகாதாரம் சார்ந்த புத்தகம் / கையேடு தயாரித்து வெளியிடுதல்.

<table>
<tr><td colspan="3"><ul>
<li>6 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் உள்ள மாணவியர்களுக்கு மாதவிடாய் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.</li>
<li>மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)</li>
</ul></td></tr>
<tr><td>11.09.2019</td><td>புதன்கிழமை</td><td>Swachhata Hi Seva (SHS) Day</td></tr>
<tr><td colspan="3"><ul>
<li>பள்ளிகளில் அனைத்து மாணவர்களை Swachhata Hi Seva (SHS) Day – 2019 நிகழ்ச்சியில் பங்கேற்றல்.</li>
<li>3 முதல் 5 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் கைகழுவுதல் / சோப்பினை பயன்படுத்துதல் சார்ந்த பிரச்சாரத்தில் பங்கேற்கச் செய்தல்</li>
<li>6 முதல் 8 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் பள்ளியில் தூய்மைப் பிரச்சாரத்தில் (Shramdaan) பங்கேற்கச் செய்தல்</li>
<li>பள்ளி வளாகத்திற்கு வெளியே 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களை தானாக முன்வரும் (Shramdaan) நிகழ்ச்சியில் பங்கேற்றல்.</li>
<li>மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)</li>
</ul></td></tr>
<tr><td>12.09.2019</td><td>வியாழக்கிழமை</td><td>Swachhata School Exhibition Day</td></tr>
<tr><td colspan="3"><ul>
<li>சுத்தம் சார்ந்த நிகழ்வுகளை புகைப்படம், ஓவியங்கள், கார்டுன்கள், முழக்கங்கள் போன்றவைகளை தயாரித்துப் பள்ளியில் கண்காட்சி ஏற்பாடு செய்து பெற்றோர்கள் மற்றும் சமுதாய உறுப்பினர்களை அழைத்து காணச் செய்தல்.</li>
<li>அனைத்துப் பள்ளிகளில் இத்தகைய கண்காட்சிகளை தொகுத்து மாவட்ட அளவில் ஆவணமாக்குதல்.</li>
<li>உள்ளூரில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள குப்பையிலிருந்து மறுசுழற்சி செய்யத்தக்க வகையில் உள்ள மூலப்பொருட்களைக் கொண்டு கலைப்பொருட்கள் தயாரித்தல். உ–ம். உள்ளூர் கலாச்சாரங்களை ஊக்குவிக்கும் விதமாக கலைநுணுக்கத்துடன் கூடிய குப்பைத் தொட்டிகள் உருவாக்குதல்.</li>
<li>மாவட்டம் வாரியாகப் பங்கேற்ற மொத்த பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)</li>
<li>மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளில் தேர்வு செய்யப்பட்ட ஓவியப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி தாள்களின் தெளிவான புகைப்படம் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)</li>
</ul></td></tr>
<tr><td>13.09.2019</td><td>வெள்ளிக்கிழமை</td><td>Swachhata  Action Day</td></tr>
<tr><td colspan="3"><ul>
<li>சுகாதாரக்குழு / சபா கூட்டப்பட்டு சுத்தம் சார்ந்த நிகழ்வுகள் குறித்து கலந்தாலோசித்து பள்ளியில் புதிய செயல்பாடுகளை செய்திட திட்டமிடுதல்.</li>
<li>தன் சுத்தம், உடல் நலம், மன நலம், சுற்றுச்சூழல், சமூக நலம் குறித்த விழிப்புணர்வினை மாணவர்களுக்கு உண்டாக்குதல்.</li>
<li>பள்ளிச் சுற்றுப் புறத்தினையும் கழிவறைகளை சுத்தமாக பராமரிப்பதற்கு மாவட்ட / வட்டார / குறு வள மைய அளவில் போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.</li>
<li>பள்ளியில் தண்ணீர் சேமித்து வைக்கப்பட்டுள்ளதையும், பாதுகாப்பான தண்ணீர் பயன்பாட்டில் உள்ளதையும் குறித்து மாணவர்கள் உணரவைத்தல்.</li>
<li>மாணவர்கள் சுத்தமான வகையில் கழிவறை பயன்படுத்துவதையும் குடிநீர் வழங்குவதையும் உணர்தல்.</li>
<li>மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)</li>
</ul></td></tr>
</table>

| 14.09.2019 – 15.09.2019 | சனிக்கிழமை – ஞாயிற்றுக்கிழமை | Letter Writing Day |
|---|---|---|

- மாணவர்கள் பள்ளிக் கட்டடங்கள், கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதி பராமரிப்பினை சார்ந்து உள்ளூர் பஞ்சாயத்து / பள்ளி மேலாண்மைக்குழு / மற்ற பிரமுகர்களுக்கு அஞ்சல் அட்டை வாயிலாக தெரிவித்திட ஊக்குவித்தல்.
- கடந்த நில நாட்களாக தூய்மை நிகழ்வுகள் (Swachhata Pakhwada) குறித்து அறிந்த குறிப்புகளில் பெற்றோர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விவரங்களை பெற்றோர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவித்திட ஊக்குவித்தல். இவற்றில் சில கடிதங்களை மாவட்ட ஆவணமாக தொகுத்திட வேண்டும். சிறந்த தபால்களை மாநிலத்திட்ட இயக்ககத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)

| 16.09.2018 | திங்கட் கிழமை | Prize Distribution Day |
|---|---|---|

- ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி, விவாத மேடை மற்றும் வினாடி – வினாப் போட்டிகளை நடத்தி தூய்மையை ஊக்குவிக்க பங்கேற்றமைக்காக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோருக்கு பரிசு வழங்குதல்.
- அனைத்துப் பள்ளிகள்/ கல்வி நிறுவனங்கள் நடைபெற்ற "தூய்மை நிகழ்வுகள்" (Swachhta Pakhwada) நிகழ்ச்சி சார்ந்த சிறப்பான நிகழ்வுகள் மாவட்ட மற்றும் மாநில அளவில் தொகுக்கப்பட்டு வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- மாவட்டம் வாரியாக நிகழ்வுகளில் பங்கேற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கையினை (தனித்தனியாக) புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களை மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)
- மாவட்ட அளவில் ஓவியப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் மாவட்ட அளவில் பரிசு பெற்ற வர்கள் விவரம், ஓவியத் தாள் மற்றும் கட்டுரைத் தாள்.

| **விவரம்** | **3 முதல் 5 வகுப்பு வரையுள்ள மாணவர்கள் கைகழுவுதல் / சோப் நிகழ்வுகளில் பங்கேற்றவர்கள்** | **6 முதல் 12 வகுப்பு வரையுள்ள மாணவர்கள் பள்ளி அல்லாத வெளிப்புற நிகழ்வுகளில் பங்கேற்றவர்கள்** | **உள்ளூர் பஞ்சாயத்து / பள்ளி மேலாண்மைக்குழு / மற்ற பிரமுகர்களுக்கு அஞ்சல் அட்டை வாயிலாக தெரிவித்த மாணவர்கள்** |
|---|---|---|---|
| பங்கேற்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | | | |

**ஒம்/***********

**மாநிலத் திட்ட இயக்குநர்**